

THE CALLING OF CHRISTIANS

# கிறிஸ்தவர்களின் அழைப்பு

தேவனுடைய திட்டம் – பாகம் 01

# கிறிஸ்தவர்களின் அழைப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் பார்க்க இருக்கின்ற தலைப்பு கிறிஸ்தவர்களின் அழைப்பு. அழைப்பு என்றால் என்ன? இந்த அழைப்பு நமக்கு எப்படி கிடைத்தது? நாம் பிறந்து வளர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக மரிப்பதற்காகவா அழைக்கப்பட்டு இருக்கிறோம்? அல்லது எதற்காக அழைக்கப்பட்டு இருக்கிறோம்? போன்ற கேள்விகளுக்கு விடையாக இந்தப் பாடத்தை நாம் பார்க்க இருக்கிறோம். இதற்கு ஆதார வசனமாக 1 பேதுரு 2:21-ல் நாம் வாசிக்கும் போது,

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். - **1 பேதுரு 2:21***

இதில் அப்.பேதுரு குறிப்பிடும் அடிச்சுவடு மற்றும் மாதிரி எதைக் குறிக்கிறது? நாம் எதைப் பின்பற்றி வருமாறு கூறுகிறார்? இதைப் புரிந்து கொள்ள இதற்கான ஜோடி வசனமாக அப்போஸ்தலர் பவுல் எபிரேயர் 3:1-ல் கூறிய வசனத்தைப் பார்ப்போம்.

*இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; - **எபிரேயர் 3:1***

இந்த வசனத்தில் நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது, "கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பாருங்கள்".

### இந்த வார்த்தையை நாம் எப்படிப் புரிந்து கொள்வது?

இதை நாம் பேதுரு கடலின் மேல் நடந்த சம்பவத்தை வைத்து புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். கர்த்தர் இயேசு வனாந்தரத்தில் ஜனங்களுக்கு உபதேசித்து முடித்த பின்பு, சீஷர்களை தமக்கு முன்பாக அக்கரைக்கு செல்லும்படி அனுப்பிவிட்டார். படகு நடுக்கடலை சேரும்போது எதிர்க்காற்று உண்டாகிற்று. அப்பொழுது, அலைகளினால் படகு அலைவுப்பட்ட வேளையில், கர்த்தர் கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார். கர்த்தர் கடலின் மேல் நடந்து வந்ததைப் பார்த்த பேதுரு தானும் அதுபோல நடக்க கட்டளையிடுமாறு கேட்டுக் கொண்டார். கர்த்தர் வா என்றதும் பேதுருவும் கடலின் மேல் நடந்தார். எது வரையென்றால் "இயேசுவை கவனித்துப் பார்க்கும்" வரை மட்டுமே. எப்பொழுது அவர் தன் பார்வையை கர்த்தரை விட்டு விலக்கி வீசுகின்ற காற்றை நோக்கினாரோ, அப்பொழுதே கடலில் மூழ்க தொடங்கினார். இதேப் போன்று தான் நம்முடைய வாழ்க்கையிலும்.

தண்ணீர் என்பது சத்தியம், விசுவாசம் இவைகளுக்கு ஒப்பிட்டு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. விசுவாச கப்பலில் பயணிக்கும் நாம், காற்று எனும் உலகத்தால் அலைகழிக்கப்படும்போது, "இயேசு கிறிஸ்துவை நோக்கி கவனித்துப் பார்த்து" நம் பார்வையை அவரை விட்டு விலக்காமல் இருந்தால் மட்டுமே நாம் இந்தப் பாதையில் மூழ்காமல் நடந்து போக முடியும். ஒருவேளை நாம், நம் பார்வையை அவரை விட்டு விலக்கினோமானால் நாம் மூழ்கத் தொடங்கி விடுவோம். அப்பொழுதும் அவர் நம் கையைப் பிடித்து, கிருபை அளித்து நம்மை மீண்டும்

நிற்க வைக்கிறார். இப்பொழுதும், நாம் இந்தப் பாடத்தை  வேதத்தைப் புரிந்து கொள்ள உதவும் முறைகளில் ஒன்றான நிழல், நிஜம் என்ற முறையைப் பயன்படுத்திப் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

இந்த நிழல், நிஜம் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அப்போஸ்தலர் பவுல். இதை குறித்து அவர் கூறும் போது "ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்தி பார்ப்பது" என்று விளக்குகிறார்.

ஆவிக்குரியவைகள் என்று சொல்லும்போது, அது தேவனுடைய வேத வசனங்களை குறிக்கிறது. ஆனால், நாம் எப்படி வேத வசனங்களை வேத வசனங்களோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்பது? இப்படி சம்பந்த படுத்துவதன் மூலம் நம்மால் அர்த்தத்தை எப்படி புரிந்து கொள்ள முடியும்? மேலும் சிலருக்கு  "இது மனிதர்களால் எழுதப்பட்டு, தொகுக்கப்பட்ட புத்தகம் தானே?  இது எப்படி தேவனால் அருளப்பட்ட பரிசுத்த வேதாகமம் ஆகும்? "என்கின்ற சந்தேகம் கூட இருக்கலாம்.

இதற்கான பதில்,  பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இரண்டு ஏற்பாடுகளைக் கொண்டது.  இவ்விரண்டு ஏற்பாடுகளின் காலப்பகுதி மிக நீண்டதொரு காலப்பகுதி. இது தேவனால் 40 தேவ மனிதர்களைக் கொண்டு எழுதப்பட்டது. ஆனால் இதில் இருக்கும் ஆச்சரியம் என்னவென்றால், இந்த 40 நபர்களும் வாழ்ந்த காலப் பகுதியோ வேறு வேறு. இப்படியிருக்க,  எப்படி இவர்கள் எழுதிய வார்த்தைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒத்துப் போகிறது?  உதாரணத்திற்கு,  ஆதியாகமத்தை எழுதிய மோசே வாழ்ந்த காலப் பகுதி வேறு,  வெளிப்படுத்தின விசேஷம் எழுதின யோவான் வாழ்ந்த காலப் பகுதி வேறு.  ஆனால் இவர்கள் எழுதிய காரியங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒத்திசைவாக உள்ளது. வேதத்தில் உள்ள 66 புத்தகங்களை எடுத்துக் கொண்டாலும் இவைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒத்திசைவாகவே உள்ளது. இது எப்படி சாத்தியம்? ஒன்று இவர்கள் அனைவரும் ஒரே காலப்பகுதியில் வாழ்ந்து ஒருவரோடொருவர் கலந்து பேசி எழுதி இருக்க வேண்டும்.  அல்லது வெவ்வேறு காலப்பகுதியில் வாழ்ந்த இவர்களைக் கொண்டு தேவன் எழுதி இருக்க வேண்டும்.

ஆம் பிரியமானவர்களே,  இந்த 40 நபர்களும் வெவ்வேறு காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பது நாம் அறிந்ததே.  ஆகையால், இந்த பரிசுத்த வேதாகமம்,  தேவ மனிதர்களைக் கொண்டு தேவனால் அருளப்பட்டது என்பதை நம்மால் தெளிவாக உர்ஜிதப்படுத்த முடிகிறது.

எனவே, ஒன்றுக்கொன்று இசைவான,  தேவனால் அருளப்பட்ட இந்த வேத வசனங்களை ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படுத்திப் பார்த்து நம்மால் அர்த்தத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியும். மேலும்,  தேவனுடைய திட்டம் குறித்தும் அதில் நமக்கு உள்ள பங்கு குறித்தும் நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த நிழல், நிஜம் என்ற வேதத்தை புரிந்து கொள்ள உதவும் முறையை,  நாம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டில்,  இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்க,தேவன் அனுப்பிய 10 வாதைகளில் கடைசி வாதையான தலைச்சன்  சங்காரத்தில், இஸ்ரவேலின் தலைச்சன்களை மட்டும் காப்பாற்ற ஒரு ஆடு அடிக்கப்பட்டு பஸ்கா பண்டிகை அனுசரிக்கப்பட்டது. இது பழைய ஏற்பாட்டில் நடந்த ஒரு நிழலான சம்பவம். புதிய ஏற்பாட்டில் இதன் நிஜமான சம்பவமாக,  அப். பவுல் குறிப்பிடும் போது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா பண்டிகையில் அடித்த ஆட்டிற்கு ஒப்புமைப்படுத்தி, "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" என்று எழுதுகிறார்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், நிஜமாக நடக்க வேண்டிய சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் நிழலாக நடந்து முடிந்துள்ளது என்பதே.
இதை இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள ஒரு உலகப் பிரகாரமான உதாரணத்தை பார்ப்போம். பள்ளிகளில் கொண்டாடப்படும் ஆண்டு விழாவில் (Annual Day), மாணவர்கள் தங்கள் நடனம் மற்றும் நாடகத்தை விழாவிற்கு முன்பதாகவே ஒத்திகை (Rehearsal) பார்ப்பார்கள்.

இதேபோன்றுதான் புதிய ஏற்பாட்டில் நிஜமாக நிறைவேற வேண்டிய சம்பவங்களுக்கு முன்பதாக நிழலாக பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் நடந்துள்ளது.

இதைக் குறித்து வேதம்," இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்தில் உள்ள நமக்கோ எச்சரிப்புண்டாகும் படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்று கூறுகிறது.

*இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. - I கொரிந்தியர் 10:11*

இதற்கான மற்றுமொரு உதாரணமாக, ஆபிரகாம் அவரது செல்லக் குமாரன் ஈசாக்கைப் பலி செலுத்த அழைத்துச் செல்லும் சம்பவத்தைக் குறித்துப் பார்ப்போம்.

இந்த சம்பவம் நடக்கும் போது, ஈசாக்கு குழந்தையாக இல்லாமல் வாலிபப் பிராயத்தில் இருந்தார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆபிரகாம் ஈசாக்கை பலியிட மலையின் மேல் அழைத்துச் செல்லும்போது, பலி செலுத்துவதற்கான ஆடு தங்களிடம் இல்லை என்பதை ஈசாக்கு நன்கு அறிவார். இருந்தபோதிலும், பலி செலுத்துவதற்கு தேவையான விறகுகளை தாமே தன் தோளின் மேல் சுமந்து சென்றார். பலியிட வேண்டிய மேடை தயாரானதும், ஆபிரகாம் படு என்றதும் படுத்துக்கொண்டார். ஈசாக்கு நினைத்திருந்தால் அங்கிருந்து தப்பி சென்று இருக்க முடியும். ஆனால், தம் தந்தையின் சொல்லுக்கு முற்றிலும் கீழ்படிந்தவராகி தன்னையே பலி செலுத்த ஒப்புக்கொடுத்தார். இது பழைய ஏற்பாட்டில் நடந்த நிழலான சம்பவம். இதற்கு நிஜமான சம்பவமாக, புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தான் மரணிக்கத் தேவையான சிலுவை மரத்தை தாமே சுமந்து, தம் பிதாவின் சித்தத்திற்கு தன்னை முற்றிலும் கீழ்ப்படுத்தினார். இதிலிருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், பழைய ஏற்பாட்டில் நடந்த சம்பவங்களுக்கு, நிஜமான சம்பவங்களாக புதிய ஏற்பாட்டில் நிகழ்ந்துள்ளது என்பதே. அதாவது ஆவிக்குரியவைகளை (வேத வசனங்களை) ஆவிக்குரியவைகளோடு (வேத வசனங்களோடு) சம்பந்தப்படுத்தி பார்க்கும் பொழுது அநேக காரியங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். இப்படி சம்பந்தப்படுத்தி பார்க்கும் போது மட்டுமே நம்முடைய அழைப்பைக் குறித்தும் வேதத்தின் அடிப்படையில் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

*அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம். - **1 கொரிந்தியர் 2:13***

இப்பொழுது இந்தப் பாடத்தின் கருவாகிய நம்முடைய அழைப்பு குறித்து வேதத்தில் இருந்து சில உதாரணங்களை கொண்டு சம்பந்தப்படுத்திப் பார்ப்பதன் மூலம் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

முதலாவதாக இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு, காணானுக்கு வனாந்தர பிரயாணமாக செல்லும்போது நடந்த சம்பவம் ஒன்றைக் குறித்துப் பார்ப்போம்.

இஸ்ரயேலர்களுக்கு எபிரேயர்கள் என்று மற்றுமொரு பெயரும் உண்டு. அதற்கு காரணம், இவர்கள் ஏபேரின் சந்ததியில் இருந்து வந்ததால் இவர்களை எபிரேயர்கள் என்று அழைத்தனர். தேவன் இவர்கள் மத்தியில் வாசம் செய்ய விரும்பினார். எனவே, மோசேயிடம் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணும் படி தேவன் கூறினார்.

*தங்கள் நடுவே நான் வாசம்பண்ணும்படி, தங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அவர்கள் அறிவார்கள்; நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர். - **யாத்திராகமம் 29:46***

*அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. - **யாத்திராகமம் 25:8***

**இப்பொழுதும், நம்முடைய சிந்தனையை தூண்டும் விதமாக ஒரு கேள்வி!!**
**மோசே பத்துக் கற்பனைகளை உடைத்தாரா? இல்லையா?**

இந்த கேள்விக்கு அநேகருடைய பதில் உடைத்தார் என்பதே. ஆனால் மோசே பத்துக் கட்டளைகளை உடைக்கவில்லை. யாத்திராகமம் 19 ஆம் அதிகாரம் தொடங்கி நாம் வாசிக்கும் போது, மோசே முதன் முதலில் சீனாய் மலைக்கு சென்ற போது, அங்கே பத்து கற்பனைகளையும் சில நியாயப்பிரமாணங்களையும் பெற்றுக்கொண்டு, ஜனங்களிடம் வந்து அவர்களுக்கு அதை அறிவித்தார். ஜனங்களும் அதைக் கேட்டு "கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின் படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்".

*மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். - **யாத்திராகமம் 24:3***

இந்த சம்பவம் நடந்து சில காலங்களுக்குப் பின்பு மோசேவை, தேவன் மீண்டுமாக மலைக்கு மேல் வருமாறு கூறினார். இம்முறை மோசேயுடன் ஆரோன், நாதாப், அபியூ மற்றும் இஸ்ரவேலின் 70 மூப்பர்களும் உடன் சென்றனர். அங்கே அவர்களின் முன்பாக மோசே மலையின் மேல் ஏறி, மேகத்தின் நடுவில் மறைந்து, அங்கே 40 நாள் இரவும் பகலும் தங்கி கற்பலகைகளுடன் கீழே திரும்பி வந்தார்.

அவர் பெற்று வந்த கற்பலகைகளில் இருந்த காரியமானது, தேவன் இஸ்ரயேல் ஜனங்கள் மத்தியில் வாசம் செய்ய விரும்பின ஸ்தலத்தைக் குறித்த திட்டம் ஆகும். தேவன் வாசம் செய்ய விரும்பின அந்த ஸ்தலத்தின் பெயர் ஆசரிப்புக் கூடாரம். இந்த ஆசரிப்புக் கூடாரத்தை வடிவமைப்பதற்குத் தேவையான மூடு திரைகளின் நிறங்கள், அதன் அளவுகள், கூடாரத்தில் உள்ளே வைக்க வேண்டிய பொருட்களின் வேலைப்பாடுகள், அவைகள் எந்த உலோகத்தால் செய்யப்பட வேண்டும், மற்றும் அவைகள் எங்கு வைக்கப்பட வேண்டும் போன்று விஷயங்கள் அடங்கிய திட்டத்தையே அதாவது ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரியை மோசே கற்பலகைகளில் கொண்டு வந்தார்.

*சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார். - **யாத்திராகமம் 31:18***

இந்தக் கற்பலகைகளை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டு, மோசே கீழே வரும் பொழுது தான் ஜனங்கள் பொன் கன்றுக்குட்டியை செய்து வணங்கிக் கொண்டிருந்தனர்.

*அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; - **யாத்திராகமம் 32:19***

பொன் கன்றுக்குட்டியையும் அவர்களின் நடனத்தையும் கண்ட மோசே, கோபமூண்டவராகி அந்தக் கற்பலகைகளை உடைத்துப்போட்டார். அந்நாட்களில் தேவனிடம் ஜெபம் செய்ய, சந்திப்பின் கூடாரம் என்றொரு ஸ்தலம் இருந்தது. அங்கு சென்று, கற்பலகைகளை உடைத்ததை நினைத்து மோசே மனவேதனை அடைந்து உண்ணாமலும், உறங்காமலும் தேவனிடத்தில் ஜெபம் செய்தார். பின்பு தேவன் மோசேவை உடைத்த கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டாம் கற்பலகைகளை இழைத்துக் கொண்டு மீண்டும் மலைக்கு மேல் வரும்படி அழைத்தார். அதன்பின், மோசே மீண்டுமாக 40 நாட்கள் மலையின் மேல் இருந்து, ஆசரிப்புக்கூடாரத்தின் திட்டங்களை வாங்கி வந்து கூடாரத்தின் பணிகளைத் தொடங்கினார்.

*மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு. - **யாத்திராகமம் 25:40***

மேலே உள்ள வசனத்தை நாம் கவனமாக வாசிக்கும் போது, அதில் தேவன் மோசேயிடம் அவருக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே செய்ய எச்சரிக்கையாயிருக்கும் படி கூறினார். ஏன் அவ்வாறு தேவன் கூற வேண்டும்?

ஏனென்றால், அந்த முறைமைகளில் ஏதேனும் தவறு ஏற்பட்டுவிட்டால் அதற்கான தண்டனையும் இருந்தது. இதற்கு ஒரு உதாரணம் ஆரோனின் புத்திரர்கள். அவர்கள் தேவன் கூறாத அந்நிய அக்கினியை கூடாரத்தின் உள்ளே கொண்டு வந்ததால் தேவன் அவர்களைக் கொன்றுப்போட்டார். எனவே, தேவன் மலையின் மேல் காண்பித்த ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியின் படி செய்ய எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு மோசேவிடம் கூறினார்.

நாம் ஏற்கனவே பழைய ஏற்பாட்டு சம்பவங்கள், புதிய ஏற்பாட்டுக்கு நிழலாக இருப்பதாகப் பார்த்தோம். இப்பொழுது, நாம் புதிய ஏற்பாட்டின் நிஜத்திற்குள்ளாக கடந்து போகலாம். பழைய ஏற்பாட்டில் எப்படி தேவன் ஜனங்கள் மத்தியில் வாசம் செய்ய ஒரு ஆலயத்தை (அ) ஸ்தலத்தைக் கட்ட விரும்பினாரோ, அதாவது ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட விரும்பினதுப் போல, புதிய ஏற்பாட்டிலும் ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்புகிறார்.

*நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? -**1 கொரிந்தியர் 3: 16***

## இந்த வசனத்தில் சொல்லப்படும் ஆலயம் யார்?

நாமே அந்த ஆலயம். பழைய ஏற்பாட்டில் எப்படி தேவன் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களின் மத்தியில் வாசம் செய்ய, ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினாரோ, அதேபோல் நம்மிடத்திலும் ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்புகிறார். இன்னும் குறிப்பாக சொல்லப்போனால், நம்மையே தேவன் வாசம் செய்யும் ஒரு ஆலயமாக மாற விரும்புகிறார். நிழலான ஆசரிப்பு கூடாரத்தைக் கட்டுவதற்கு, மலையின் மேல் மோசேக்கு ஒரு மாதிரி காண்பிக்கப்பட்டது. அதுபோல, நிஜமான ஆலயம் கட்டப்படுவதற்கும் ஒரு மாதிரி காண்பிக்கப்பட வேண்டுமல்லவா? இந்தப் பாடத்தின் ஆதார வசனத்தை ஒரு முறை வாசிப்போம்.

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். - **1 பேதுரு 2:21***

ஆம், பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி நமக்கு ஒரு மாதிரியை பின் வைத்துப் போயிருக்கிறார். "**கிறிஸ்துவே நமக்கான மாதிரி**".

எப்படி பழைய ஏற்பாட்டில் மலையின் மேல் ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரி காண்பிக்கப்பட்டதோ, அதேப் போன்று நமக்கான மாதிரியும் கொல்கொதா மலையின் மேல் சிலுவையில் அறையப்பட்டு காண்பிக்கப்பட்டது.

இப்பொழுதும் இந்தப் பாடத்தின் மையக் கேள்விக்குள் கடந்து வருவோம். நம்முடைய அழைப்பு என்ன? இந்தக் கேள்விக்கு, நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது அவரிடம் எடுத்துக் கொள்ளப்படுவதே நம்முடைய அழைப்பு என்பதே பொதுவாக நம்முடைய பதிலாக இருக்கும். ஆனால் யாரைக் கிறிஸ்து தம்மிடம் எடுத்துக் கொள்வார்? இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ற அனைவரையுமா? உலக மக்கள் தொகையில் 33 % கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களா? இதற்கான பதில் இல்லை என்பது நாம் அறிந்ததே. ஏனென்றால் முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

*முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். - **மத்தேயு 24:13***

இன்னும் பார்க்கும் பொழுது, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலர், உண்மையுள்ளவர்கள் அதிலும் சிலர் என்று பார்க்கிறோம். இந்த உண்மையுள்ளவர்களைக் குறித்து வேதம் "சிறு மந்தை" என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து வெகு சொற்ப ஜனங்கள் மாத்திரமே, இந்த அழைப்பை அறிந்துள்ளனர் என்று நமக்குப் புரிகிறது. ஆக, இந்த விசேஷமான அழைப்பு எதைக் குறிக்கிறது? நாம் தேவனுடைய ஆலயமாக மாறுவதே நம்முடைய அழைப்பு. நாம் இந்த அழைப்பிற்கு பங்குள்ளவர்களானால் மட்டுமே உண்மையான உயிர்த்தெழுதலுக்குள் கடந்து போக முடியும். அடுத்து, தேவனுடைய ஆலயமாக மாறுவது என்றால் என்ன? கிறிஸ்துவின் சாயலாக மாறுவதே தேவனுடைய ஆலயமாக மாறுவதாகும்.

பூமிக்குரிய ஆலயமாகிய ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்ட எப்படி சில பொருட்கள் தேவைப்பட்டதோ, அதேபோல ஆவிக்குரிய ஆலயம் கட்டப்பட அதற்கும் கற்கள் தேவை. இதைக் குறித்து அப்போஸ்தலர் பேதுரு கூறும் போது

*ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். - **1 பேதுரு 2:5***

இவ்வசனத்தின் படி, நாம் தேவனுடைய ஆலயம் கட்டப்படத் தேவையான ஜீவனுள்ள கற்களாக இருக்கிறோம். இப்படி ஜீவனுள்ள கற்களாக இருப்பதற்காகவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இந்தக் கற்களைக் குறித்து இயேசு கிறிஸ்து கூட தம் முதலாம் வருகையில் பேசி இருக்கிறார். கர்த்தர் எருசலேம் நோக்கி பவனி வரும்போது, அவருடைய அற்புதங்களைக் கேள்விப்பட்ட ஜனங்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, ஓசன்னா என்றுப் பாடி "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அதைக் கேட்ட அங்கிருந்த பரிசேயர்கள் கர்த்தரை நோக்கி, போதகரே உம்முடைய சீஷர்களை

அதட்டும் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக்கா 19:40)

இங்குக் கர்த்தர் குறிப்பிடும் கற்கள் யார்? கற்கள் எப்படி பேசும்? கர்த்தர் எருசலேமில் பவனி வந்த நேரம் பண்டிகைக் காலமாக இருந்தப்படியால், அங்கே யூதர்கள் மாத்திரம் இல்லாமல் கிரேக்கர்கள் உள்ளிட்ட புறஜாதிகளும் இருந்தனர். ஆண்டவருடைய அற்புதங்களைக் கேள்விப்பட்ட கிரேக்கர்கள் கர்த்தரை சந்திக்க அனுமதிக்குமாறு பிலிப்புவிடம் கேட்டனர். இந்த புறஜாதிகளைக் குறித்தே கர்த்தர் கற்கள் என்று கூறுவார்.

கர்த்தர் ஏன் புறஜாதிகளை கற்களுக்கு ஒப்பிட்டுக் கூற வேண்டும்? அக்காலத்தில் யூதர்கள் மாத்திரமே தேவனை அறிந்தவர்களாக இருந்ததினால் ஜீவனுடையவர்களாக இருந்தனர். யூதர் அல்லாத புறஜாதிகள் அனைவரும் தேவனற்றவர்களாக இருந்ததினால் ஜீவனற்றவர்களாக இருந்தனர். எனவே தான், நம்முடையக் கர்த்தர் புறஜாதிகளை ஜீவனற்றவர்களாய் இருந்ததினால் கற்களுக்கு ஒப்பிட்டுக் கூறினார். யூதர்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ளாததினால் அவர்களுடைய வாய்ப்பு ஜீவனற்றவர்களாக இருந்த புறஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அன்று ஜீவனற்ற கற்களாக இருந்த நாம், இன்று கர்த்தரை விசுவாசிப்பதின் மூலம் ஜீவனுள்ள கற்களாக ஆவிக்கேற்ற மாளிகையாக கட்டப்பட்டு வருகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!!

இப்படி ஜீவனற்றவர்களாக இருந்த நாம் ஜீவனுள்ள கற்களாக மாற்றப்பட, தேவனுடைய ஆலயமாகக் கட்டப்பட, மோசே மலையின் மேல் கண்ட மாதிரியைப் போல், கர்த்தர் நமக்கான மாதிரியாக, தம்முடைய அடிச்சுவடை பின்பற்றி வருமாறு அழைத்திருக்கிறார்.

இந்த மாபெரும் அழைப்பு நமக்கு எப்படி கிடைத்தது? இது எப்படிப்பட்ட அழைப்பு? என்று நாம் உணர்ந்து கொள்ளும் வண்ணமாக கர்த்தர் உவமையாக விளக்கியுள்ளார். உவமையை நாம் பார்ப்பதற்கு முன், உவமை என்றால் என்ன? என்று முதலாவதுப் பார்ப்போம்.

*அவர்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார். உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்சொன்னார். - **மாற்கு 4:33-34***

உவமையென்றால் கூற வரும் கருத்தை கதை வடிவில் கூறுவதாகும். அந்தப்படி, கர்த்தர் தம்முடைய சிந்தையில் இருக்கும் காரியங்களை சீஷர்களுக்கு புரிய வைக்கும் வண்ணமாக கதை வடிவில் அநேக உவமைகளாக கூறியுள்ளார்.

*அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. - **மத்தேயு 13:10-11***

மேற்கண்ட வசனத்தின் படி, கர்த்தர் பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை உவமைகளின் வாயிலாக கூறினார் என்று வாசிக்கிறோம். சீஷர்களுக்கு தாம் தெரியப் படுத்த விரும்பும் காரியத்தை சிறு கதை மூலமாகவோ, அல்லது ஏதேனும் நிகழ்வுடனோ ஒப்பிட்டு உவமையாகக் கர்த்தர் கூறினார். ஆக, அவர் பேசின ஒவ்வொரு உவமையிலும் ராஜ்யத்தைப் பற்றின ரகசியம் அடங்கியிருக்கும்.

உவமைக்குள்ளும் ஆழமான சத்தியம் அடங்கியிருக்கும் என்பதற்கு உதாரணமாக ஒரு உவமையை இப்பொழுதுப் பார்க்கலாம்.

ஒரு வசதியான வாலிபன் கர்த்தரிடம் வந்து, "நித்திய ஜீவனைப் பெற நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு கர்த்தர், கற்பனைகளை அதாவது 10 கட்டளைகளை கைக்கொள் என்பார். அதற்கு அந்த வாலிபன் தான் அதை சிறு வயது முதல் கைக்கொள்வதாகவும், இன்னும் தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் உன்னுடையவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு என்றார். ஆனால் அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தி உடையவனாய் இருந்ததினால் துக்கமடைந்தவனாய் திரும்பிப் போய்விட்டான். இதைக் கண்ட கர்த்தர், தம்முடைய சீஷர்களைப் பார்த்து, ஒற்றை வரியில் உவமை ஒன்றைக் கூறினார். அதைக் குறித்து மத்தேயு 19:23-24-ல் வாசிப்போம்.

*அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். - **மத்தேயு 19:23,24***

இந்த உவமையில் சொல்லப்பட்டதுப் போல், எப்படி ஊசியின் காதில் ஒட்டகம் நுழைய முடியும்? ஊசியின் காது என்றால் என்ன?

இதை நாம் புரிந்துக் கொள்ள கிறிஸ்து வாழ்ந்த காலகட்டத்திற்கு செல்ல வேண்டும். அக்காலத்தில், எருசலேம் பட்டணத்திற்கு ஏழு மிகப் பெரிய வாசற்க்கதவுகள் இருந்தன. அந்த வாசற்க்கதவுகளின் நடுவில் சிறிய வாசற்க்கதவுகள் இருக்கும். இந்த சிறிய வாசல்களுக்கு ஊசியின் வாசல் அல்லது ஊசியின் காது என்று பெயர். பொதுவாகப் பெரிய வாசல்கள் இரவு நேரங்களில் அடைக்கப்பட்டு இருக்கும். ஊசியின் வாசல் மாத்திரமே திறந்து இருக்கும். அந்த சமயத்தில், ஒட்டகங்களைப் பயன்படுத்தி தூற தேசம் சென்று வியாபாரம் செய்பவர்கள் எருசலேம் பட்டணத்திற்கு வரவேண்டுமானால், ஊசியின் வாசல் வழியாகவே உள்ளே நுழைய முடியும். அப்படி உள்ளே வர வேண்டுமானால், ஒட்டகத்தின் மேலே உள்ள பாரங்கள் அனைத்தையும் இறக்கி வைத்து விட்டு, ஒட்டகத்தை மண்டியிட வைத்து கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி பட்டணத்துக்கு உள்ளே கொண்டு வர வேண்டும். இது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். இந்தக் காரியத்தைக் கர்த்தர், ஐசுவரியவான் பரலோக இராஜியத்தில் பிரவேசிப்பதோடு ஒப்பிட்டு உவமையாக கூறியுள்ளார்.

இப்பொழுது இந்த உவமையின் அர்த்தத்தைக் குறித்துப் பார்ப்போம். எருசலேம் நகரத்திற்குள் நுழைய ஒட்டகம் மண்டியிட்டு நகர்ந்து எப்படி உள்ளே செல்கிறதோ, அதுபோல ஒருவன் பரலோக இராஜ்ஜியமான பரம எருசலேமுக்குள் நுழைவதற்கும், தன்னைத் தான் தாழ்த்தி, தன் புலன்களை எல்லாம் அடக்கி இடுக்கமான பாதையில் செல்ல வேண்டும். தேவன் தாழ்மையுள்ளவனுக்கோ கிருபையளிக்கிறார் !!

இதுப்போன்று 39 க்கும் மேற்பட்ட உவமைகளைக் கர்த்தர் பேசி உள்ளார். அவைகள் ஒவ்வொன்றும் ஆழமான சத்தியத்தை உள்ளடக்கியுள்ளது.
இப்பொழுதும், இந்த விலையேரப்பெற்ற அழைப்பு நமக்கு எப்படி கிடைத்தது என்று புரிந்துக் கொள்ள கர்த்தர் பேசின பெரிய கலியாண விருந்து உவமையைக் குறித்துப் பார்ப்போம். இந்த உவமை மத்தேயு 22:1-14 - ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உவமையில், ஒரு ராஜா தன் குமாரனின் கலியாணத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச் சொல்லும்படி தன் ஊழியக்காரரை அனுப்பிய போதோ, அவர்களுக்கு வர மனதில்லாதிருந்தது. பின்னும், அவர் வேறு ஊழியக்காரர்களை அனுப்பி விருந்துக்கு எருது அடிக்கப்பட்டு விட்டது, விருந்தும் ஆயத்தமாய் இருக்கிறது கல்யாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு சொல்ல சொன்னான். அழைக்கப்பட்டவர்களோ அவர்களின் பேச்சை அசட்டைப்பண்ணி, ஒரு வகுப்பார் வயலுக்கும் வியாபாரத்திற்கும் சென்று விட்டனர். மற்றொரு வகுப்பார் அந்த ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி அவர்களை கொலை செய்தார்கள். யூதருடைய வழக்கப்படி, கல்யாண விருந்துக்கு மூன்று முறை அழைப்பு விடுக்கப்பட வேண்டும். இப்பொழுது கூட இந்த நடைமுறை சில சபைகளில் பின்பற்றப்பட்டு வருகிறதை நாம் காண்கிறோம். இந்த உவமையிலும் அழைக்கப்பட்டவர்களுக்கு மூன்று முறை அழைப்பு விடுத்தாகிவிட்டது. தம்முடைய ஊழியக்காரரை, அழைக்கப்பட்டவர்கள் கொலை செய்ததை ராஜா கேள்விப்பட்டபோதோ,கோபமடைந்தவராய்த் தன் சேனைகளை அனுப்பி அந்த கொலைப்பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். பின்பு ராஜா, தன் ஊழியக்காரரை நோக்கி: கல்யாண விருந்து ஆயத்தமாய் இருக்கிறது, விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களோ அபாத்திரமாய் போய்விட்டார்கள். ஆகவே, நீங்கள் புறப்பட்டுப் போய் வழியிலே நீங்கள் பார்க்கிற அனைவரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றார். அந்த ஊழியக்காரரும் புறப்பட்டு போய் வழியில் தாங்கள் காண்கிற நல்லார், பொல்லார் என யாவரையும் விருந்துக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். இப்பொழுது கல்யாண சாலை விருந்தாளிகளால் நிரம்பி வழிந்தது. இங்கே நாம் பார்க்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், யூதர்களின் முறைப்படி கல்யாண விருந்துக்கு அழைப்பு விடுக்கும் போது, அவர்களுக்கு கல்யாண வஸ்திரம் கொடுத்து அழைப்பது அவர்களது வழக்கமாய் இருந்தது. அதன்படி வழியருகே இருந்து, கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கல்யாண வஸ்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. கல்யாண வஸ்திரம் தரித்திருந்த அனைவரும் கல்யாண விருந்துக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அப்பொழுது விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்த போது, அங்கே கல்யாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷன் இருந்தான். ராஜா அவனிடம் கல்யாண வஸ்திரம் இல்லாததைக் குறித்து கேட்ட போது பேசாமல் இருந்தான். இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அந்த மனுஷன் கல்யாண வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு விருந்துக்கு வரும்போது, அந்த வஸ்திரத்தையும் தரித்திருந்து, உள்ளே வந்த பிறகு கல்யாண வஸ்திரத்தை களைந்து போட்டு தன் சொந்த வஸ்திரத்தை தரித்திருந்தான். ஏனென்றால், கல்யாண வஸ்திரம் தரிக்காதவர்கள் கல்யாண விருந்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே, அவர் உள்ளே வந்த பிறகே வஸ்திரத்தை கழட்டி வைத்திருக்க வேண்டும். அப்போது ராஜா தன் பணிவிடை காரரை நோக்கி, அந்த மனுஷனை புறம்பான இருளிலே போடும்படி கூறினார்.

இப்பொழுது, இந்த உவமைக்கான அர்த்தத்தைப் பார்ப்போம். முதலாவதாக, கல்யாண விருந்தைக் குறித்துப் பார்க்கும்போது, இதேப் போன்றதொரு கல்யாணம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

*நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன். - வெளி 19:7*

இங்கு ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. யார் அந்த ஆட்டுக்குட்டியானவர்? யார் அவருடைய மனைவி? இதைக் குறித்து அப். பவுல் பேசிய வார்த்தைகளை கவனிக்கும்போது,

*நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன். - 2 கொரிந்தியர் 11:12*

அப்போஸ்தலர் பவுல் இயேசு கிறிஸ்துவை ஒரே புருஷன் என்று குறிப்பிடுகிறார். ஆக, அந்த ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

அடுத்து, அவருடைய மனைவி கற்புள்ள கன்னிகை பரிசுத்த சபையை குறிக்கிறது. மேலும், கர்த்தர் பேசின பத்து கன்னிகைகள் உவமையில் வரும் புத்தியுள்ள கன்னிகைகளும் இவர்களே. ஏன் கிறிஸ்துவும் சபையும் கணவன் மனைவி ஸ்தானத்துடன் ஒப்பிட்டு பேசப்பட்டுள்ளார்கள்? காரணம், கணவன் மனைவி இருவரும் ஏக சிந்தை உடையவர்களாய், ஒரே புரிதலுடன் இருப்பார்கள். அதே போன்று, கிறிஸ்துவும் சபையும் ஏக சிந்தை உடையவர்களாய் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாய் இருக்கிறார்கள். ஆக, கல்யாண விருந்தின் மணவாளன் கர்த்தர் இயேசு கிறிஸ்துவையும், மனவாட்டி சபையையும், தன் குமாரனுக்காக கல்யாண விருந்தை ஆயத்தம் பண்ணின ராஜா பிதாவாகிய தேவனையும் குறிக்கிறது.

## ராஜா தன் குமாரனுக்கு விருந்தை ஆயத்தம் பண்ணுவது எதை குறிக்கிறது?

இதைக் குறித்து யோவான் 6:44 -ல் வாசிக்கும் போது,

*என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். - **யோவான் 6:44***

"பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால்"என்று பார்க்கிறோம். பிதாவின் சித்தம் இல்லாமல், ஒருவனும் இந்த அழைப்பிற்குள் வரான். பிதாவாகிய தேவனே இந்த விருந்தை ஆயத்தம் பண்ணுகிறார்.

## முதலாவதாக விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் யார்?

முதன்முதலாக இந்த அழைப்பிற்குள் வந்தவர்கள் இஸ்ரவேலர்கள். இவர்கள் தான் தேவனுடைய திட்டத்தில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். பூமியில் அநேக ஜனங்கள் இருந்தும், தேவன் இவர்களிடம் மாத்திரமே தொடர்பு வைத்து தம்முடைய சொந்த ஜனமாக தெரிந்து கொண்டார். ஏன் தேவன் முதன் முதலில் இவர்களை அழைக்க வேண்டும்? ஏன் இவர்களை மாத்திரம் தெரிந்து கொள்ள வேண்டும்? நம்மில் பலருக்கும் இந்த சந்தேகம் இருக்கலாம்.

தேவன் இவர்களை மாத்திரம் தெரிந்து கொண்டதற்கான காரணம் இவர்களின் முற்பிதாவாகிய ஆபிரகாம். தேவன் ஆபிரகாம் மேல் ஏன் இவ்வளவு அன்பு செலுத்த வேண்டும்? ஆபிரகாமுடைய நேசக்குமாரன் ஈசாக்கை, தேவன் தகன பலியாக பலியிட சொன்னவுடன், மறுப்பேதும் தெரிவிக்காமல், தன் மகனைக் கூட்டிக்கொண்டு தேவன் குறித்த மலைக்குச் சென்றார். போகும்போது, தன் வேலைக்காரரை நோக்கி, "நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்கு திரும்பி வருவோம்" என்றார். இந்த வார்த்தைகளை கவனிக்கும் போது, ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். என்னவென்றால், "நாங்கள் உங்களிடத்துக்கு திரும்பி வருவோம்"என்பதே. தன் மகனை தேவனுக்கென்று பலி செலுத்தினாலும் மீண்டும் தேவன் மகனை உயிருடன் தருவார் என்று ஆபிரகாம் மனதில் எண்ணம் கொண்டார். இதற்கு காரணம், ஈசாக்கின் மூலம் உனக்கு சந்ததி வரும் என்ற வாக்குத்தத்தத்தின் மேல் ஆபிரகாம் வைத்த விசுவாசம். அவரின் இந்த உறுதியான விசுவாசத்தின் மூலம் தேவனுக்கு நண்பனாகவும் மாறிவிட்டார்.

*மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். - **எபிரேயர்: 11: 17-19***

தேவன் ஆபிரகாமின் மேல் வைத்த அன்பின் நிமித்தம் அவருடைய சந்ததியாகிய இஸ்ரவேலர்களை, தம்முடைய தெய்வீக திட்டத்திற்கு பங்காளிகளாக இருக்கும் படி அழைத்தார்.

### யார் அந்த ஊழியக்காரர்கள்?

அடுத்ததாக, விருந்துக்கு வரும்படி அழைக்கப்பட்டவர்களை அழைக்க அனுப்பப்பட்ட ஊழியக்காரர் யாரைக் குறிக்கிறார்கள்? யோவான் ஸ்நானகன் இஸ்ரவேலர்களுக்கு கல்யாண விருந்தின் அழைப்பாக மனந்திரும்பும் படி அழைப்பு விடுத்தார். ஆனால், அவர்கள் அவருடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை. நம் கர்த்தர் தம்முடைய முதலாம் வருகையில் காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே வந்தார். அவருடைய அழைப்புக்கும் அவர்கள் செவி கொடுக்கவில்லை.

*அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. - **யோவான்: 1 :11***

கிறிஸ்துவும் தன் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அதன் பின், மீண்டுமாக அழைப்பு வருகிறது. இம்முறை, ராஜா தன் ஊழியக்காரரிடம் எருதுகள் அடிக்கப்பட்டு விட்டது, விருந்தும் ஆயத்தமாகிவிட்டது என்று சொல்லச் சொன்ன காரியம் எதைக் குறிக்கிறதென்றால், கர்த்தர் இயேசு சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கிறது. எப்படி எருது அடிக்கப்படும் போது இரத்தம் சிந்துதல் இருக்குமோ, அதுபோல கர்த்தரும் சிலுவையில் இரத்தம் சிந்தி நமக்கு மீட்பரானார். விருந்தும் ஆயத்தமாகிவிட்டது என்று பார்க்கிறோம்.

இதை அறிவிக்க வந்த ஊழியக்காரர்கள் யார்? நம் கர்த்தருடைய சீஷர்கள். இவர்கள் முதலாவது யூதர்களிடம் மாத்திரமே சுவிசேஷித்தனர். எப்படி உவமையில் அழைப்பு விடுத்த ஊழியக்காரர்களை அவமானப்படுத்தி கொன்று போட்டார்களோ, அதேப்போல் சீஷர்களையும் துன்பப்படுத்தினர் மற்றும் கொலை செய்தனர். முதலாவது ஸ்தேவானை அவர்கள் கொன்றுப்போட்டார்கள்.

அப்.பவுலுக்குக் கூட அவருடைய ஊழியத்தில் அவருக்கு மிகுந்த இடையூறுகளை ஏற்படுத்தினர். பவுல் ஒரு பட்டணத்தில் பிரவேசித்து, போதித்து மறுப்பட்டிணத்திற்கு செல்வதற்குள் அங்கு கலகத்தை ஏற்படுத்தி விடுவார்கள். பவுலை கொலை செய்யும் அளவுக்குக் கூட கலகத்தை ஏற்படுத்திவிடுவார்கள். உதாரணத்திற்கு, லீஸ்திரா என்ற பட்டணத்தில் பவுலும் பர்னபாவும் பிரசங்கித்த போது, அந்தப் பட்டணத்தார் பவுலை மெர்குரி என்றும், பர்னபாவை யூபித்தர் என்றும் அழைத்தனர். மேலும் மாலையிட்டு அவர்களுக்கு பலியிட முற்பட்டனர். அதைக் கண்ட அவர்கள் இருவரும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, "நாங்களும் உங்களைப் போன்று பாடுள்ள மனுஷன் தானே ஏன் எங்களுக்கு ஆராதனை செய்கிறீர்கள் தேவனுக்கு ஆராதனை செய்யுங்கள்" என்று சொல்லி அவர்களை அமர்த்துவதற்க்குள், சில யூதர்கள் வந்து அந்த பட்டணத்தார் பவுலை கல்லெறியும் அளவுக்கு அவர்களை மாற்றி விடுவர். பவுல் மரித்ததாக நினைத்த அவர்கள், பட்டணத்திற்கு வெளியே அவரைக் கொண்டு போய் போட்டு விட்டனர். பின்பு, சீஷர்கள் சிலர் கேள்விப்பட்டு பவுலை தூக்கிச் சென்று குணப்படுத்தினர்.

இப்படியாக, அழைக்கப்பட்டவர்களாகிய இஸ்ரவேலர்கள் அழைப்பை சொல்லப் போனவர்களை அடித்து, துன்புறுத்தி, அவமானப்படுத்தி சாகடித்தனர்.

அடுத்ததாக, தன் ஊழியக்காரர் கொலை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்ட ராஜா, கோபமடைந்து சேனையை அனுப்பி அந்த கொலைப்பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தை சுட்டெரித்தது எதைக் குறிக்கிறதென்றால், இஸ்ரவேல் தேசம் தீக்கிரையாக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கர்த்தர் இயேசு இஸ்ரவேலர்களை அத்தி மரத்திற்கு ஒப்பிட்டு அநேக இடங்களில் பேசி இருப்பார். ஒரு நாள் கர்த்தர், ஒரு அத்தி மரத்தைப் பார்த்து அதில் கனிகள் இல்லாததினால் சபித்து விடுவார். அந்த மரம் முழுவதுமாக பட்டுப் போய்விடும். அதேபோல், அவர் எருசலேம் பட்டணத்தையும் சபித்தார். இதைக் குறித்து மத்தேயு 23:37-39-ல் வாசிக்கலாம்.

*எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். - **மத்தேயு 23:37-39***

அத்திமரமாகிய இஸ்ரவேலர் பட்டுப்போனதற்கும், எருசலேமின் சாபம் பலித்ததற்கும் முக்கியமான காரணம்,

*அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள். - **மத்தேயு 27:25***

எனவே கிறிஸ்துவின் இரத்தப்பலி இவர்களின் மேலும், இவர்களின் பிள்ளைகள் மேலும் வந்தது. அக்காலத்தில் எருசலேம் ரோமர்கள் வசம் இருந்தது. யூதர்களுக்குள்ளே ரோமர்களுக்கு எதிரான சிலோத்தே என்றதொரு அமைப்பு செயல்பட்டு வந்தது. இவர்களை தீவிரவாதிகள் என்றும் அழைப்பர். இயேசுவின் சீஷர்களில் ஒருவரான சீமோன் கூட சிலோத்திய வகுப்பைச் சேர்ந்தவர். இந்த அமைப்பு ரோமர்களுடன் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வர். அவ்வாறு இருந்தபோது, ரோமர்கள் எருசலேமின் மேல் படையெடுத்து அதை தீக்கிரையாக்கினர். அந்தப் பட்டணத்தையே அழித்து விட்டனர். இதைக் குறித்து கர்த்தர் மத்தேயு 24:2 -ல்

*இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். - **மத்தேயு 24:2***

கர்த்தர் சொன்னது போல, தேவாலயத்தின் ஒரு கல், ஒரு கல்லின் மேல் இராதபடிக்கு முற்றிலுமாக இடிக்கப்பட்டு விட்டது. தீத்துராயன் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் சுட்டெரித்து தேவாலயத்தையும் இடித்துப் போட்டான். இஸ்ரவேல் தேசம் என்றொரு தேசமே இராதபடி ஜனங்கள் அனைவரும் சிதறுண்டு போனார்கள். சுமார் 2000 வருடம் தேசமே இல்லாதிருந்தது. அதன் பின் 1948 ஆம் ஆண்டு மீண்டுமாக தேசம் உருவாகிற்று. அழைக்கப்பட்டவர்களாகிய இஸ்ரவேலர்களோ தங்களுடைய வாய்ப்பை இழந்துவிட்டனர்.

### யார் அந்த வழியருகே இருப்பவர்கள்?

அடுத்ததாக, வழியருகே இருப்பவர்களை விருந்திற்கு அழைத்து வரும்படி ராஜா கூறுனார். யார் அவர்கள்? நாம்தான் அந்த வழியருகே இருந்தவர்கள். எபேசியர் 2:12 - ல் வாசிக்கும் போது,

*அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். - **எபேசியர் 2:12***

நாமே முற்காலத்தில் தேவனற்றவர்களாய், காணியாட்சிக்குப் புறம்பானவர்களாய் இருந்தோம். இந்த மாபெரும் அழைப்புக்கு சம்பந்தமில்லாதவர்களாக இருந்த நாமோ, யூதர்களின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் இந்த அழைப்பை சுதந்தரிக்கும் பொருட்டு கிருபைப் பெற்றோம். முன்பு அப்போஸ்தலர்கள் யூதர்களிடமே சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். அவர்கள் செவிக்கொடாமல் போனதினாலேயே புறஜாதிகளுக்கு சுவிசேஷிக்க தொடங்கினர். இப்பொழுது கல்யாண சாலை நிரம்பி வழிகிறது. காணியாட்சிக்கு புறம்பானவர்களாக இருந்த நாம் கிறிஸ்தவ மண்டலமாக, கல்யாணசாலை நிரம்பி வழியும் அளவுக்கு உள்ளோம்.

## கலியாண வஸ்திரம் எதைக் குறிக்கிறது?

இப்பொழுதும், நாம் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். விருந்து சாலைக்குள் நுழைய வேண்டுமென்றால், கல்யாண வஸ்திரம் தரித்திருக்க வேண்டும்.

இந்த வஸ்திரம் எதைக் குறிக்கிறது? இதற்கு நீதியின் வஸ்திரம் என்று பெயர். இன்னும் சொல்லப்போனால் கிறிஸ்துவே அந்த வஸ்திரம். கலாத்தியர் 3:27

*ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. - **கலாத்தியர் 3:27***

கிறிஸ்துவையே நாம் வஸ்திரமாக தரித்திருக்க வேண்டும். நம்முடைய சொந்த வஸ்திரம் (அ) நீதி அழுக்கான கந்தை. நம் சுய நீதியை வைத்து நம்மால் நீதிமானாக முடியாது. ஏனென்றால் யோவான் குறிப்பிடும்போது, "ஒருவன் பாவம் இல்லை என்று அறிக்கையிட்டால் அவன் பொய்யன்" என்று சொல்வதைப் பார்க்கிறோம். எனவே, நாம் கிறிஸ்துவின் நீதியை தரித்துக் கொள்ளும்போது மாத்திரமே நீதிமான்களாக எண்ணப்பட முடியும். நாம் கிறிஸ்துவின் நீதியை தரித்திருந்தால் மட்டுமே தேவனுக்கு முன்பாக நீதிமானாக நிற்க முடியும்.

இந்த நீதியின் வஸ்திரத்தை நாம் எதுவரை அணிய வேண்டும்? நம் மரண பரியந்தம் இந்த வஸ்திரத்தை அணிந்தவர்களாக காணப்பட வேண்டும். மாறாக, ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் அணிந்து விட்டு மற்ற நாட்களில் நம் சொந்த நீதியை அணிந்தவர்களாக இருக்கக்கூடாது. உவமையில் கூறப்பட்டது போல், ராஜா கல்யாண சாலைக்குள் வரும்போது வஸ்திரமில்லாதவனாக காணப்படக்கூடாது. ஏனென்றால் நினையாத நாழிகையில் ராஜா வந்துப் பார்க்கும்போது, வஸ்திரமில்லாதவனாக காணப்பட்டால், நம் கை,கால்களை கட்டி புறம்பான இருளில் போட்டு விடுவார்.

## இந்த புறம்பான இருள் எதைக் குறிக்கிறது?

இந்த அழைப்பிற்குள் வருவதற்கு முன் நாம் இருந்த நிலைமையே புறம்பான இருள்.

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். - **1 பேதுரு:2:9***

இப்பொழுதோ, நாம் வேத வசனங்களைக் கேட்டு, அந்தகாரமாகிய இருளில் இருந்து, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வந்துள்ளோம். ஒருவேளை, நீதியின் வஸ்திரத்தை அணிந்தவர்களாகிய நாம் அந்த வஸ்திரத்தை கழட்டி வைக்கும் போது, முன்பிருந்த இருளுக்கே சென்று விடுவோம்.

*ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். - **எபிரேயர் 6:4-6***

எனவே ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டு சத்திய வெளிச்சத்திற்குள் வந்த நாம், மறுதலித்து போனவர்களாக, புறம்பான இருளுக்குள், அதாவது சத்திய வெளிச்சத்தை விட்டு சென்றவர்களாக இராமல் நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வோமாக.

இறுதியாக, நாம் இந்தப் பாடத்தை சுருக்கமாக பார்ப்போம். நம்முடைய அழைப்பு எது என்ற கேள்விக்கு விடையாக, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இஸ்ரவேலர்கள் மத்தியில் வாசம் செய்ய விரும்பி, ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டச் சொன்னார். அதற்கான மாதிரி, மலையின் மேல் மோசேக்கு காண்பிக்கப்பட்டது. அதுபோல, இப்பொழுது தேவன் வாசம் செய்யும் ஆலயமாக கட்டப்பட நம்மை அழைத்துள்ளார். நாம் தேவனுடைய ஆலயமாக மாற நமக்கான மாதிரி கர்த்தர் இயேசு. அதாவது நாம் இயேசு கிறிஸ்துவின் சாயலாக மாறுவதே நம்முடைய அழைப்பு. முன்பு இந்த அழைப்பு, யூதர்கள் வசம் இருந்தது. இப்பொழுதோ, இந்த அழைப்பு காணியாட்சிக்குப் புறம்பானவர்களாக இருளில் இருந்த நமக்கு கிடைத்துள்ளது. இவ்வாறு ஆச்சரியமான ஒளியின் இடத்திற்கு வந்துள்ள நாம், மீண்டும் புறம்பான இருளுக்குள் செல்லாதபடி, நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலை தரித்துக் கொண்டவர்களாக, இந்த அழைப்பைப் பற்றிக் கொண்டவர்களாக, ஜீவிக்க தேவன் தாமே நம் அனைவருக்கும் கிருபை அளிப்பாராக!!

**ஆமென்**


**CONTACT**

**The Millennium Post**

*For Questions and Clarifications*

**+919972582085**

www.themillenniumpost.com